இந்து சமய அறநிலையத்துறை

அனுப்புநர்
இர. பச்சையப்பன், பி.எஸ்.சி., பி.எல்.,
இந்து சமய அறநிலையத்துறை
மதுரை

பெறுநர்
வனஉயிரின காப்பாளர்,
சாம்பல் நிற அணில்கள் சரணாலயம்,
ஸ்ரீவில்லிபுத்தூர், விருதுநகர் மாவட்டம்.

ந.க. எண். 5783/2019–2/ நேமுஎ/ நாள். 15.05.2019.

பொருள்: மதுரை மாவட்டம், பேரையூர் வட்டம் – சாப்டூர் கிராமம் சதுரகிரி – அருள்மிகு சுந்தரமகாலிங்கசுவாமி திருக்கோயில் பக்தர்கள் பாதுகாப்பாக மலைமீது ஏறி தரிசனம் செய்து வர உதவிட வேண்டுதல் – தொடர்பாக.

பார்வை முதன்மைச் செயலர் / ஆணையர், சென்னை –34 ஆய்வு நாள்.09.05.2019

********

மதுரை மாவட்டம், பேரையூர் வட்டம், சாப்டூர், சதுரகிரி, அருள்மிகு சுந்தரமகாலிங்கசுவாமி திருக்கோயில் ச.பி.46(3)ன் கீழ் பிரசுரம் செய்யப்பட்ட பட்டியலைச் சேர்ந்த திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலின் ITMS No.32109 ஆகும்.

மதுரை மாவட்டம், பேரையூர் வட்டம், சதுரகிரி, அருள்மிகு சுந்தரமகாலிங்கசுவாமி திருக்கோயில் கடந்த 09.05.2019 அன்று இந்துசமய அறநிலையத்துறையின் முதன்மைச் செயலர் / ஆணையர் அவர்களால் ஆய்வு செய்யப்பட்டு ஆய்வுக்குறிப்பு அனுப்பப்பட்டுள்ளது. மேற்படி ஆய்வுக் குறிப்பின் நகல் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

மேற்படி ஆய்வுக் குறிப்பில், 2015–ல் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கிற்கு முன்பு பக்தர்கள் தினந்தோறும் தரிசனத்திற்கு அனுப்பப்பட்டனர் என்றும், கடந்த 4 ஆண்டுகளாக பிரதோஷம் முதல் அமாவாசை முடிய மற்றும் பிரதோஷம் முதல் பௌர்ணமி முடிய மாதம் ஒன்றுக்கு எட்டு நாட்கள் மட்டும் பக்தர்கள் தரிசனத்திற்கு அனுப்பப்படுகிறார்கள் என்றும், மழை வெள்ளம் இல்லாத சாதாரண நாட்களில் காலை 6.00 மணி முதல் மாலை 4.00 மணி முடிய தினந்தோறும் பக்தர்களை தரிசனத்திற்கு அனுப்புவது குறித்து முடிவு செய்யவும், மலைமீது செல்லும் வழியில் குறுக்கிடும் ஆறுகளின் மீது இரும்புப் பாலம் அமைக்கவும், பக்தர்கள் செல்லும் வழியில் அபாயகரமாக உள்ள பாறைகளை செதுக்கி படி ஏற்படுத்தவும் மற்றும் பக்தர்கள் மலைப்பாதையில் ஏறி இறங்கும் போது அபாயகரமான இடங்களில் பக்தர்களின் பாதுகாப்பிற்காக கைப்பிடி கம்பிகள் அமைக்கவும் நடவடிக்கை எடுக்க தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வலுவலக ந.க.எண்.4659/2019–(1),(2)/இ3, நாள்.15.05.2019 உத்தரவுகளின் அடிப்படையில் மலைமீது புறக்காவல் நிலையம் அமைக்க காவல்துறைக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. வெள்ளம் மற்றும் கனமழை காலங்களை தவிர்த்து இதர சாதாரண நாட்களில் திருக்கோயிலுக்கு வரும் பக்தர்களை காலை 6.00 மணி முதல் மாலை 4.00 முடிய அனுமதிப்பதால் மாதத்தில் எட்டு நாட்கள் மட்டும் பக்தர்கள் மலைக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டு வரும் நிலையில் அந்த எட்டு நாட்களில் ஏற்படும் பக்தர்களின் நெரிசல் குறையும் சூழ்நிலை உள்ளதால் 2015 வெள்ளப்பெருக்கிற்கு முன்னர் அனைத்து தினங்களிலும் பக்தர்கள் தரிசனம் செய்ய மலைக்கு அனுப்பப்பட்டதை முறைப்படுத்தி இயற்கை சீற்றம் இல்லாத சாதாரண நாட்களில் காலை 6.00 மணி முதல் மாலை 4.00 முடிய பக்தர்களை மலைக்கோயிலுக்கு தரிசனத்திற்கு அனுப்ப உரிய நடவடிக்கை எடுக்க கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மேலும் மலையில் ஏறும் போது பாறைகள் வழுக்கிவிட்டு பக்தர்களின் உயிருக்கு அபாயம் ஏற்படும்படியான ஆபத்தான இடங்களில் பாறைகளை செதுக்கி பக்தர்கள் மலைமீது ஏறுவதற்கு ஏற்றாற்போல் மலைபடிக்கட்டு அமைக்கவும், பக்தர்கள் தவறி விழுந்துவிடாமல் தடுக்க பாதுகாப்பிற்காக கைபிடி கம்பிகள் பொருத்தவும் திருக்கோயில் நிர்வாகத்திற்கு உரிய அனுமதி வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மலைப்பாதையில் செல்லும் வழியில் குறுக்கிடும் ஆறுகளில் ஏற்படும் வெள்ளப்பெருக்கு பக்தர்களை பாதிக்காத வண்ணம் மேற்படி ஆறுகளின் மீது இரும்புப் பாலங்கள் திருக்கோயில் மூலம் அமைக்க உரிய அனுமதி வழங்க கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இணைப்பு –

சென்னை இந்துசமய அறநிலையத்துறை
முதன்மைச் செயலர் / ஆணையர்
ஆய்வறிக்கை நாள்.09.05.2019

ஒம்/–இர.பச்சையப்பன்,
இணை ஆணையர்

/உ.ந.உ.ப./

மேலாளர்
15.5.19

நகல்

1) செயல் அலுவலர்,
அருள்மிகு சுந்தரமகாலிங்கசுவாமி திருக்கோயில்,
சதுரகிரி, பேரையூர் வட்டம், மதுரைமாவட்டம்.

நகல் பணிந்தனுப்பப்படுகிறது.

2) முதன்மைச் செயலர்/ ஆணையர்,
இந்துசமய அறநிலையத்துறை, சென்னை – 34.